# உதயன்

விலை ரூபா [illegible]-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி 12 வியாழக்கிழமை (26-06-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 207


# பெரியமடு அருகே படையினர் மீது புலிகள் பெரும் எதிர்த் தாக்குதல்!

## இரு முனைகளால் ஊடறுத்துச்சென்றனர்

வவுனியா, ஜூன் 26

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் மீது நேற்று முன்தினம் இரவு 10.45 மணி அளவில் புலிகள் பெரும் எதிர்த் தாக்குதல் ஒன்றை நடத்தினர். ஓமந்தைக்கும் புளியங்குளத்துக்கும் இடையே உள்ள பெரியமடுப் பகுதியில் இடம்பெற்ற இத் தாக்குதல் பல மணி நேரம் நீடித்தது. படையினரின் பாதுகாப்பு அரணை கிழக்குப் புறமாகவும் மேற்குப் புறமாகவும் ஊடறுத்துச் சென்று புலிகள் இத்தாக்குதலை நடத்தினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தாண்டிக்குளம், நொச்சி மோட்டைப் பகுதிகள் மீதான தாக்குதல்களின் பின்னர் புலிகளால் படையினர் மீது நடத்தப்பட்ட மிகப் பெரிய தாக்குதலாக இது கருதப்படுகிறது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸார் வவுனியாவுக்கு வாபஸ்!

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையில் கைப்பற்றப்பட்ட பகுதிகளை தக்க வைக்க ஈடுபடுத்தப்பட்ட பொலீஸாரை விலக்கிக் கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்தது.

இந்த முடிவையடுத்து போர் முனையில் இருந்த பொலீஸார் பெருமளவில் நேற்று வவுனியா திரும்பியதை அவதானிக்கக் கூடியதாக இருந்ததென வவுனியா செய்தியாளர் தெரிவித்தார்.

### கப்பல் சேவை

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று 150 பயணிகளுடன் கப்பல் சேவை இடம் பெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

(இ-3)

## புலிகள் பெரியமடுவில் நடத்தியது 'செய் அல்லது செத்துமடி -2'

வவுனியா, ஜூன் 26

நேற்று பெரியமடுவில் மேற்கொண்ட தாக்குதலுக்கு ''செய் அல்லது செத்துமடி 2'' என புலிகளின் பெயர் சூட்டியுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி தாண்டிக்குளம், நொச்சி மோட்டைப் பகுதிகள் மீதான தாக்குதலுக்கு ''செய் அல்லது செத்துமடி 1'' என பெயரிடப்பட்டிருந்தது என்று புலிகளின் குரல் வானொலி நேற்றுத் தெரிவித்தது.

## அலை அலையாக வந்த புலிகள்

கொழும்பு, ஜூன் 26

படையினர் மீதான தாக்குதலின் போது புலிகள் அலை அலையாக வந்ததாகவும் —

ஆயிரத்துக்கும் மேற்பட்ட புலிகள் இத் தாக்குதல்களில் ஈடுபட்டதாகவும்— பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலின் பின் புலிகள் வடமேற்குப் பகுதிக் காடுகள் வழியாகத் தப்பிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## தளபதி ஒருவரும் பலி!

கொழும்பு ஜூன், 26

புலிகளின் தாக்குதலின் போது உயிரிழந்த படையினரில் 19 ஆவது விஜயபாகு படைப்பிரிவு கட்டளைத் தளபதியான லெப்டினன்ட் கேணல் டேன் என்பவரும் கொல்லப்பட்டுள்ளார். மரணத்துக்குப் பின்னர் பதவி உயர்வாக கேணல் பதவி அவருக்கு வழங்கப்படுவதாக நேற்று அரசு தரப்பால் அறிவிக்கப்பட்டது.

இறந்த ஏனைய படை அதிகாரிகளில் ஒரு கப்டனும், ஒரு லெப்டினன்ட்டும் அடங்குவர்.

# இழப்புக்கள் குறித்து முரணான தகவல்கள்

## இரு தரப்பினருக்கும் சேதம் அதிகம்

பெரியமடுப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் ஏற்பட்ட இழப்புகள் குறித்து படையினர் தரப்பிலும் புலிகள் தரப்பிலும் ஒன்றுக்கொன்று முரணான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இத்தாக்குதலில் 4 அதிகாரிகளும், 60 படையினரும் இறந்ததாகவும் —

68 படையினர் காயமடைந்ததாகவும் அரசு அறிவித்தது.

புலிகள் தரப்பில் 150 பேர் இறந்ததாகவும், பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்தனர் என்றும் அரசினால் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் புலிகள் இழப்புக்கள் குறித்து நேற்று வெளியிட்ட தகவலில், தமது தரப்பில் 85போராளிகள் களப்பலியானதாக அறிவித்துள்ளனர்.

100 படையினர் இறந்ததாகவும் —

200 படையினர் காயம் அடைந்தனர் எனவும் — அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

## 5 ஆட்லறிகளை கைப்பற்றியதாக புலிகள் தரப்பு நேற்று அறிவிப்பு

வவுனியா, ஜூன் 26

தாக்குதலின்போது தாம் 120 மி. மீ. ஆட்லறி உட்பட 5 ஆட்லறிகளைக் கைப்பற்றியதாக ''புலிகளின் குரல்'' அறிவித்தது.

இத்தாக்குதலின் போது 5 ஆட்லறி பீரங்கிகளையும், 300 ஆட்லறி ஷெல்களையும் மற்றும் மோட்டார்கள், காவு வண்டிகள், ஆயுதங்கள், இராணுவ வாகனங்கள் ஆகியவற்றைப் புலிகள் கைப்பற்றியதாக ''புலிகளின் குரல்'' மேலும் தெரிவித்தது.

சில டாங்கிகளையும், படையினரின் விசேட மோட்டார் சைக்கிள்களையும் புலிகள் கைப்பற்றியாதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

புலிகள் ஆட்லறிகளைக் கைப்பற்றியதாக வெளிவந்த செய்திகளை அரசு மறுத்துள்ளது.

# நேற்று மாலையே படையினர் மீண்டும் ஒன்று சேர்ந்தனர்!

## இழப்பு குறித்து இன்னும் முழுத் தகவல் இல்லை

கொழும்பு ஜூன் 26

புலிகளின் தாக்குதலின் போது சிதறுண்ட படையினர் நேற்று மாலை 4-30 மணியளவிலேயே மீண்டும் ஒன்றுசேர்ந்தனர். ஆனால் எவ்வளவு தூரத்துக்கு இழப்பு ஏற்பட்டது என்பதை அடுத்த 24 மணி நேரத்தில்தான் அறிய முடியும்.

சண்டேரைம்ஸ் பாதுகாப்பு செய்தியாளர் இக்பால் அத்தாஸ் நேற்று பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெரியமடு தாக்குதல் குறித்து ஒரு தப்பான அபிப்பிராயம் உண்டாகியுள்ளது.

தேசிய பாதுகாப்பு அமைச்சுநேற்றுக் காலையில் விடுத்த செய்தி அதற்குக் காரணமாக இருக்கலாம்.

இத் தாக்குதல் இரண்டு இடங்களில் நடந்துள்ளது.

முக்கிய தாக்குதல் ஓமந்தைக்கு தெற்கான இடதுதில் புளியங்குளத்துக்கு ஒன்றரை கிலோ மீற்றர் வடக்கே 55 ஆவது படையணி புளியங்குளத்தை நோக்கிச் செல்லும் போது நடந்தது.

ஓமந்தைக்குத்தெற்கே இத் தாக்குதல் நடந்ததால் இராணுவத்தினருக்குப் பெரிய

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பல மணி நேரம் நீடித்த தாக்குதல்

கொழும்பு, ஜூன் 26

நேற்று முன்தினம் இரவு 10-45 மணியளவில் ஆரம்பித்த புலிகளின் தாக்குதல் நேற்று அதிகாலை 3-00 மணிவரை நீடித்ததாக அரச தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

மேலதிக துருப்புக்கள் அப்பகுதிக்கு விரைந்து சென்ற பின் நேற்றுப் பிற்பகலே படையினர் அந்தப் பகுதியைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

படையினரின் ஆட்லறிகளைக் கைப்பற்றுவதும் ஓமந்தைக்கு வடக்கே உள்ள படையினரைத் தனிமைப்படுத்துவதுமே புலிகளின் நோக்கம் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-3-21-164)

## காயம் அடைந்த படையினர் விமானம் மூலம் அநுராதபுரத்துக்கு

கொழும்பு, ஜூன் 26

தாக்குதலில் காயமடைந்த படையினர் எம் 17 ரக விமானம் மூலம் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் 68 படையினர் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தனியார் வானொலி ஒன்று நேற்றுத் தகவல் வெளியிட்டது.

# வவுனியாவில் இருந்து ஷெல் வீச்சு!

வவுனியாவில் இருந்து வடக்கு நோக்கி நேற்று முன்தினம் இரவும், நேற்றும் அகோர ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

10 நிமிட இடைவெளிக்கு ஒரு ஷெல்லாக வவுனியாவில் இருந்து ஷெல்கள் ஏவப்பட்டதால் வவுனியா நகரமே அதிர்ந்ததாக வவுனியா செய்திகள் தெரிவித்தன.

அதேநேரம் — கிபிர் விமானம் நேற்று பெரியமடுப் பகுதியில் குண்டு வீச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## அருணாசலம் தர்மலிங்கம் (தரும)

அருணாசலம் தர்மலிங்கம் அவர்கள் 24 - 6 - 97 முற்பகல் வவுனியாவில் காலமானார்.

இவர் தவமணி தேவியின் அன்புக் கணவரும் தர்சினி, தயாபரன். தர்மேந்திரன், தவநிதி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற அருணாசலம். இராசமணி அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, அன்னலட்சுமியின் அன்பு மருமகனும், அம்பலவாணர், வீரசிங்கம், நாகேஸ்வரி, காலஞ்சென்ற பரமானந்தம், முத்துராசா, பாக்கியம் ஆகியோரின் சகோதரனும், கனகரட்ணம், தர்மரெட்ணம், தவரெட்ணம், அரசரெட்ணம், ஈஸ்வரகாந்தா, பாமினிதேவி, யசோதாதேவி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25-6-97 புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. ஈசன்
(மைத்துனர்)

22, கைலாசபிள்ளையார் வீதி.
யாழ்ப்பாணம்.

(48023)

## சுப்பிரமணியம் விநாயகரத்தினம்

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணை, அரசடிவீதி, 65ஆம் இலக்க இல்லத்தில் வசித்தவருமாகிய சுப்பிரமணியம் விநாயகரத்தினம் 24-06-97 அன்று இரவு 8.30 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்—அன்னபூரணி ஆகியோரின் புத்திரனும், செல்லத்துரை, சிவபாக்கியத்தின் சிரேஷ்ட மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், விஜயரூபன், காந்தரூபன் (கொழும்பு), நாகலோஜினி, லிங்கரூபன் (யாழ். மத்திய கல்லூரி ஆண்டு —10 மாணவன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற கைலாசபிள்ளை மற்றும் இராசையா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், விஜயலட்சுமி, கோபால கிருஷ்ணன் (கொழும்பு), வசந்தமல்லிகா (பிரான்ஸ்), தயாநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் ஆசை அத்தானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25-06-97 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ரூபன்
(மகன்)

65, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(48012)

## செல்வி புஸ்பமலர் இராசலீங்கம் (கிளி)

காரைநகர் துறைமுகத்தைச் சேர்ந்தவரும் இடம் பெயர்ந்து ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியிலும் பின்பு நெடுங்கேணியிலும் வசித்தவருமாகிய செல்வி புஸ்பமலர் இராசலீங்கம் காலமானார்.

அன்னார் இராசலீங்கம் - ருக்மணிதேவி ஆகியோரின் அன்பு மகளும், புனிதமலர், தவறூபன், தவராஜன், தவபாலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற சுப்பிரமணியம், செல்லமுத்து ஆகியோரின் பேர்த்தியும், காலஞ் சென்ற கனகரத்தினம், சண்முகசுந்தரம் (செல்லமுத்துஸ் புடைவை மாளிகை, நெல்லியடி), சபாநாயகம் (செல்லமுத்துஸ் புடைவை மாளிகை, சுன்னாகம்), மகாதேவன் (இத்தாலி) ஆகியோரின் பெறாமகளும், திருமதி நா. யோகேஸ்வரி (வவுனிக்குளம்), திருமதி ஏ. இராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள வவுனிக்குளத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. சண்முகசுந்தரம்

செல்லமுத்துஸ்,
நெல்லியடி, கரவெட்டி.

(சி/1007)

## திருமதி மனோன்மணி கந்தையா

சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ் சென்ற கந்தையாவின் மனைவி மனோன்மணி 25 - 06 - 97 அன்று காலமானார்.

இவர் காலஞ் சென்ற இராசரத்தினம் (ஒய்வு பெற்ற லிகிதர், விற்பனைத் திணைக்களம், கிளிநொச்சி), மற்றும் கணேசமூர்த்தி (போதனாசிரியர், தொ. நு. கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் தாயாரும், பூமலர், கனகசுந்தரி (அதிபர், யா/ திருநெல்வேலி றோ. க. த. க. பாடசாலை) ஆகியோரின் மாமியும், ரஞ்சி, சிவா, தேவகி, சிறீதரன் ஆகியோரின் பேர்த்தியும், வண்ணார் பண்ணை திருமதி கமலாம்பிகை சுப்பிரமணியம், புங்குடுதீவு 2 ஆம் வட்டாரம் காலஞ் சென்ற பிரபல வர்த்தகர் பாலசுந்தரம் தம்பதிகளின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 26-6-97 காலை 10 மணிக்கு 14, சிவன் கோயில் வீதி, திருநெல்வேலியில் நடைபெற்றுப் பூதவுடல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கணேசமூர்த்தி
(மகன்)

14, சிவன் கோயில் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(48022)

## கூட்டுறவாளர் மாநாடு

கொழும்புத்துறை, ஜூன் 26

கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான மாநாடு இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

சகல ப. நோ. கூ. சங்கங்கள், 2-ம் படிக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள் ஆகியனவற்றின் தலைவர்கள், கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் இதில் கலந்து கொள்ள உள்ளதாக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஐ-30)

## பாலர் பாடசாலை

கொழும்புத்துறை, ஜூன் 26

யாழ். வட்டுப்பிளவத்தை கற்பக விநாயகர் சனசமூக நிலையம் நடத்தும் பாலர் பாடசாலை மீண்டும் புனரமைக்கப்பட்டு அண்மையில் செயற்பட ஆரம்பித்துள்ளது.

(ஐ-30)

## ஆஸ்பத்திரி வளவில் ஷெல்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ். போதனா வைத்திய சாலை வளவினுள் ஷெல் ஒன்று நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டது.

வைத்தியசாலையின் ஆய்வுகூடப் பின்பகுதியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த போது புதைந்த நிலையில் இந்த ஷெல் காணப்பட்டது.

படையினர் வந்து அதனை எடுத்துச் சென்றனர்.

(இ-15)

## சான்றிதழ் வழங்குதல்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் கடந்த இரண்டு மாதகாலமாகஇடம் பெற்று வந்த தொடர்பாடலுக்கான ஆங்கிலம் எனும் அடிப்படைக் கற்கைநெறி தொகுதி 17க்கான நிறைவு நாளும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை மறுதினம் சனி பி.ப2 30மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் இரா. சிவசந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை சான்றிதழ்களை வழங்கவுள்ளார். (ஐ)

### கணக்காய்வுப் பரீட்சகர் பதவி - II

மேற்படி பரீட்சகர் பதவிக்கான விண்ணப்பப் பத்திரம் மற்றும் விவரங்கள் எம்மிடம் பெறலாம்.

**Neartecher,**
186/22, குருநாதர் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(48021)

### தேவை

A/L படித்த பெண்கள் தேவை.
திறமைக்குத் தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

பரீட்சைப் பகுதி
**BOND**

(48025)

## பத்தாவது பிறந்தநாள் வாழ்த்து

செல்வன்
★ துரைசிங்கம் கலாவிநோதன் ★

உடுவிலைச் சேர்ந்த
**திரு. திருமதி துரைசிங்கம் - சந்திரா**
தம்பதியரின் சிரேஷ்ட புதல்வன் கலாவிநோதன் இன்று (26 - 06 - 1997) தனது பத்தாவது பிறந்த தினத்தை அவரது இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை ஜேர்மனியிலுள்ள அப்பா, அம்மா, தம்பிமார் மற்றும் உறவினர்கள் 'எல்லாம் வல்ல மருதடிப் பிள்ளையார் அருளால் சீரும் சிறப்புமாய் நீடூழி வாழ' வாழ்த்துகின்றனர்.

- உறவினர்கள்

''அருளருவி'',
உடுவில்.

(சி/1010)

### பலாலி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலைகளின் ஒன்றிணைந்த
# வருடாந்த மெய்வன்மைப் போட்டி 1997

**இடம்:** கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மைதானம்
**காலம்:** 27 - 06 - 1997 காலை 9.30 மணி
**தலைவர்:** கலாநிதி செ. சுந்தரம்பிள்ளை அவர்கள்
(அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)
**பிரதமவிருந்தினர்:** திரு. சோ. பத்மநாதன் அவர்கள்
(அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை)

இணைச் செயலாளர்கள்.

(48024)

## பகுதி நேர தையல் ஆசிரியர் தேவை

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையால் யாழ்ப்பாணம், நீர்வேலி, கரவெட்டி, சாவகச்சேரி, சங்கானை, சுன்னாகம் ஆகிய பகுதிகளில் ஆரம்பிக்கப்பட இருக்கும் மனைப்பொருளியல் அடிப்படைப் பயிற்சி நெறிக்கு ஆசிரியர் தேவை.

தையல், ஐசிங், பூவேலை ஆகிய பயிற்சிகளில் சான்றிதழ் பெற்றவர்கள் **29-06-97** ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபையில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு கல்வி, அனுபவ சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.

மாவட்டச் செயலாளர்

இல. 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/1009]

## இதய அஞ்சலி

### செல்லப்பா இராசலிங்கம்

இடம் பெயர்ந்து கொழும்புத்துறை வந்த
பண்பாளனே!
இணைபிரியாத் தம்பதிகளாய் எம்மிடையே
சேவையாற்றி
இளைப்பாறி இல் வாழ்வாளையும்
இன் மக்களையும்
இன்பமுடன் பழகிய ஆசிரியர்களையும்
தவிக்கவிட்டு இறைவனடிசேர்ந்தாயோ?

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

யா/ கொழும்புத்துறை
இந்து மகாவித்தியாலயம்.

(48023)

## கண்ணீர் அஞ்சலி

வேலணைப் பாடசாலைகளில் ஒன்றான
யா/ வேலணை செட்டிபுலம் அ. த. க. பாடசாலையின்
அதிபராகக் கடமையாற்றி எம்முடன் மிக
இனிமையாகப் பழகி ஒய்வுபெற்ற

### செல்லப்பா இராசலிங்கம் அவர்களின்


திடீர் மறைவு குறித்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம்.

அன்னாரின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம். அவர் தம் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்,
(48029) வேலணைப் பாடசாலைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாலுவை பதவிவிலகுமாறு வற்புறுத்துகிறார் குஜ்ரால்



## ஜனதாதள் கட்சி பிளவுபடும்



புதுடில்லி, ஜூன் 26

பலகோடி ரூபா மதிப்புள்ள கால் நடைத்தீவன ஊழல் வழக்கில் குற்றச் சாட்டுக்கள் சுமத் தப்பட்டு விசார ணையை எதிர்நோக் கியிருக்கும் பீஹார் மாநில முதல்வர் லாலு பிரசாத் யாதவ்வை பதவியில் இருந்து விலகுமாறு பிரதமர் இந்தர்குமார் குஜ்ரால் கேட்டி ருக்கிறார்.

பிரதமரது நெருங்கிய அரசியல் சகா வும் அவரது கட்சியான ஜனதாதள் கட்சி யின் தலைவருமான லாலு பிரசாத் யாதவ் மீது சீ. பி. ஐ ஏற்கனவே நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறது.

கடந்த இருபது ஆண்டு காலப்பகுதி யில் பீஹார் மாநிலத்தில் நடைபெற்று வந்ததாகக் கூறப்படும் இந்த நிதிமோசடி இந்தியாவில் அரசியல் தலைவர்கள் சம் பந்தப்பட்ட பெரிய ஊழல் விவகாரங் களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

எல்லா அரசியல் கட்சிகளின் தலை வர்களுமே யாதவ் பதவி விலக வேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர் ஆனால் தாம் குற்றம் அற்றவர் என் பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வரும் யாதவ் பதவியில் இருந்து விலகப் போவ தில்லை எனத் தெரிவித்துள்ளார்

இந்த ஊழல் விவகாரம் ஜனதாதள் கட்சிக்குள் பிளவை உருவாக்கி வருவதாக புதுடில்லியில் உள்ள அரசியல் அவதானி கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஜனதாதள் கட்சிக்குள் அதன் தலை வர் லாலு பிரசாத் யாதவ்வை எதிர்ப் போர் ஆதரிப்போர் என இரு அணிகள் உருவாகியுள்ளன.

ஜனதாதள் கட்சிக்குள் உருவாகிவரும் பிளவு பிரதமர் இந்தர் குமார் குஜ்ராலின் ஐக்கிய முன்னணி அரசுக்கு புதிய நெருக் கடிகளைக் கொண்டுவரும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

ஆளும் ஐக்கிய முன்னணியில் உள்ள 13 கட்சிகளில் ஜனதாதள் கட்சியே மிகப் பெரிய கட்சியாகும். (ஐ)

# தமிழ் நாடு கரையில் ஒதுங்கிய சடலங்கள்!

## ஈழத் தமிழர்களுடையனவா?

இராமநாதபுரம், ஜூன் 26

இராமநாதபுரம் மாவட் டத்தில் தெண்டி மற்றும் வடக்கு கடலோரப் பகுதி களில் கடந்த வாரம் ஐந் துக்கு மேற்பட்ட இனந்தெரி யாத சடலங்கள் அழுகிய நிலையில் கரை ஒதுங்கியதாக பொலீஸார் தெரிவித்துள்ள னர்.

தெண்டியை அடுத்துள்ள நம்புதாளை கடற்கரையில் அடையாளம் தெரியாத அழு கிய சடலம் ஒன்று கடந்த வியாழனன்று இரவு ஒதுங் கியது. தேவிபட்டினத்துக்கும் ஆற்றங்கரைக்கும் இடையே இரு சடலங்கள் கடலில் மிதந் தன. இதேபோல் ஓர்வாடி அருகே உள்ள மங்கலேஸ்வரி நகர் கடற்கரையில் அழுகிய ஆணின் சடலம் ஒன்றும் வியா ழக்கிழமை இரவு கரை யொதுங்கியது.

இதுவரை ஐந்துக்கு மேற் பட்ட சடலங்கள் கரை ஒதுங் கியதாகவும் அவற்றில் இரு சடலங்கள் மட்டுமே பொலீ ஸாரால் மீட்கப்பட்டிருப்பதா கவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை இராணுவத்தின ரின் தாக்குதலில் இறந்தவர் களது சடலங்களாக இவை இருக்கலாம் என்று பொலீ ஸார் சந்தேகிக்கின்றனர். (ஐ)

# ஆபாச வீடியோ படத்தில் ரஷ்ய நீதி அமைச்சர்!

## விரைவில் பதவி நீக்கப்படுவார்

பெண்களுடன் நிர்வாண நிலையில் நிற்கும் வீடியோ காட்சி ஒன்றில் ரஷ்யாவின் நீதி அமைச்சர் வெலன்டின் காணப்பட்டார். இதையடுத்து அவரை தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யுமாறு பிரதமர் செர்னோமிர்டின் அதி பர் பொறிஸ் யெல்ட்சினிடம் கேட்டிருக்கின்றார்.

நீதியமைச்சர் வெலன்டின் ரஷ்யாவின் உயர்மட்ட பாதுகாப்புச்சபை உறுப்பினராகவும் விளங்குகிறார்.

ரஷ்யாவின் மாதாந்த சஞ்சிகை ஒன்றில் இவரது வீடியோ படங்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

# நம்பிக்கை வாக்கெடுப்பில் நத்தனியாகு தப்பினார்!

## எனினும் அரசு ஆட்டம் காணும்

பிரதமர் நத்தனியாகுவின் இஸ்ரேலிய அரசாங்கம் நம்பிக்கையில்லாத் தீர்மானத் திலிருந்து தப்பிப்பிழைத்தது. 6 மணிநேர காரசாரமான விவாதத்துக்குப் பின்னர் 120 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 50 உறுப்பினர்கள் ஆதரித்தும் 55 பேர் எதிர்த் தும் வாக்களித்தனர் எஞ்சிய 15 பேரில் இரு வர் வாக்களிக்கவில்லை. 13 பேர் நாடாளு மன்றத்துக்கே வரவில்லை. வெளியுறவு அமைச்சர் டேவிட் லெவியும் நாடாளு மன்றத்துக்கு செல்லவில்லை.

நத்தனியாகு வெற்றி பெற்றாலும் அது நிரந்தரமாக இருக்கப்போவதில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன. அவரது கூட் டணிக்கட்சிகள் பிளவுபட்டு வலுவிழந்த நிலையில் இருப்பதை மேற்படி வாக்கெடுப்பு நிரூபித்துள்ளது.

கூட்டணிக்கட்சி உறுப்பினர்களில் 13 பேர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ள வில்லை. பிரதமருடன் எப்போதுமே கருத்து வேறுபாடு கொண்டிருக்கும் வெளியுறவுச் செயலர் டேவிட் லெவி அமைச்சரவையி லிருந்து விலகப்போவதாகத் தெரிவித்துள் ளார் முன்னாள் நிதி அமைச்சர் மற்றும் துணைநிதி அமைச்சர்களும் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

எனவே நத்தனியாகுவின் ஆட்சி விரை வில் கவிழ்க்கப்படடுவிடலாம் என்பதற்கான அறிகுறிகள் தென்படுவதாக அரசியல் அவ தானிகள் தெரிவிக்கின்றனர். (ஐ-5)

# கேரளாவில்

## யானைகளுக்கும் காப்புறுதித் திட்டம்!

திருவனந்தபுரம், ஜூன் 26

யானைகளையும் உள்ளடக்கிய காப்புறுதித் திட்டம் ஒன்றை முதன் முதலாக இந்திய நிறுவனம் ஒன்று ஆரம் பித்துள்ளது.

இந்தக் காப்புறுதித் திட்டத்தின் படி காப்புறுதி செய் யப்பட்ட ஒரு யானை இறந்ததும் அதன் சொந்தக்காரரர் களுக்கு நட்ட ஈடு வழங்கப்படும். அத்துடன் யானையால் ஏற்படுத்தப்படும் காயங்கள், சேதங்களுக்கான செலவும் வழங்கப்படும்.

தென்னிந்திய மாநிலமான கேரளாவில் கடந்த திங்களன்று இத்திட்டத்தின் ஆரம்ப வைபவம் இடம்பெற் ற . இந்த வைபவத்தில் ஆறு யானைகளும், 150 யானைச் சொந்தக்காரர்களும் பங்குபற்றினர்.

யானை ஒன்றின் — விலையைப் பொறுத்தே அதன் காப்புறுதி இழப்பீடு தீர்மானிக்கப்படும். தற்போது அங்கு ஒரு யானையின் விலை 14 ஆயிரம் முதல் 50 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வரை உள்ளதாக உரிமையாளர் கள் கூறுகின்றனர்

கேரள மாநிலத்தில் உள்ள யானைச் சொந்தக் காரர்களின் கூட்டமைப்பு இந்தக் காப்புறுதித் திட்டத்தை வரவேற்றுள்ளது. (ஐ)

# பொல் பொட்டை விசாரிக்க ஐ. நா. ஏற்பாடு செய்கிறது

## சீனா அதற்குக் கடும் எதிர்ப்பு

நியூயோர்க். ஜூன் 26

கம்போடியாவின் முன் னாள் சர்வாதிகாரியும் 'கெமரூச்' இயக்கத்தின் சக்தி மிக்க தலைவருமான பொல்பொட்டை சர்வதேச குற்றவிசாரணை மன்றத்தில் விசாரிப்பதற்கான ஏற்பாடு களை ஐக்கிய நாடுகள்சபை மேற்கொண்டுள்ளது.

கம்போடியாவின் இரண்டு இணைப் பிரதமர்களிடம் இருந்தும் இது தொடர்பா கத் தமக்கு வந்துள்ள கோரிக் கையை பாதுகாப்புச் சபை யில் சமர்ப்பிக்கப்போவதாக ஐ நா. செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்துள் ளார்.

சர்வதேச விசாரணை மன் றத்தை அமைக்க உதவுமாறு ஐ. நா வின் உறுப்பு நாடுகளி டம் வேண்டுகோள் விடுக்க வுள்ளதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

உலக அரங்கில்

இது விடயத்தில் உள்ள சட்டப் பிரச்சினைகளை நீக்குவதற்கு சிறிது காலம் செல்லும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை சர்வதேச விசாரணை மன்றத்தை அமைப்பதற்கு நிதி உதவி வழங்க அமெரிக்கா மறுத் துள்ளது.

பொல்பொட்டைவிசாரிக்க சர்வதேச விசாரணை மன் றம் அமைக்கப்படுவதை சீனா கடுமையாக எதிர்த் துள்ளது.

கம்போடியாவில் பொல் பொட்டின் கெமரூச் கெரில் லாக்களுக்கு இடையே பிளவு ஏற்பட்டதை அடுத்து தலைவர் பொல் பொட் போட்டி கெரில்லா அணியி னிடம் [illegible] [illegible]பது தெரிந்ததே. (ஐ)

# ஈரான் நிலக்கரிச் சுரங்க விபத்தில் 15 பேர் பலி; 30 பேர் காயம்!

தெஹிரான், ஜூன் 26

வட ஈரானில் உள்ள நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவம் ஒன்றில் குறைந்தது 15 பேர் பலியானார்கள். 30 பேர் காயமடைந்தனர்.

மின்சார ஒழுக்கு காரணமாகவே இந்த வெடிப்பு இடம் பெற்றதாகவும், 150 தொழிலாளர்கள் சுரங்கப் பகுதி யினுள் சிக்குண்டிருப்பதாகவும் ஈரானில் உத்தியோக பூர்வ செய்தி நிறுவனமான 'இர்னா' தெரிவித்தது.

மீட்பு வேலைகள் தொடர்த்து இடம் பெறுகின்றன. (ஐ)

# சிலியில் 200 பேர் பனிப் புயலில் சிக்கினர்!

## மீட்கமுடியாத நிலையில்!!

சன்டியாக்கோ, ஜூன் 26

தென்னமெரிக்காவில் சிலி மற்றும் ஆர்ஜென்ரீனா எல்லைப்புறத்தில் கடும் பனி மழையில் சுமார் 200 பேர் சிக்கிக் கொண்டுள்ளனர்.

கட்டடத் தொகுதி ஒன்றில் தங்கியுள்ள இவர்களை அங்கிருந்து மீட்கும் முயற்சிகள் தோல்வி கண்டுள்ளன.

கடும் பனி மழை அப் பிரதேசத்தை மூடியிருக்கிறது. ஹெலிகளின் உதவியுடன் முதலில் 29 பேரை மட்டுமே மீட்க முடிந்துள்ளது.

அண்டஸ் மேட்டின் மீது அமைந்துள்ள இப் பிர தேசத்தில் கடும் பனி மழை காரணமாக 20 அடி உயரத் துக்கு பனிப்படிவுகள் படிந்துள்ளன.

சுரங்கப் பாதை ஒன்று அடை பட்டுப் போனதால் அவ் வழியே வாகனங்களில் சென்று கொண்டிருந்த 42 பேர் அதற்குள் சிக்குண்டனர். சிலி நாட்டில் கடந்த [illegible] காலமாக கடும் பனிப் புயல் மழை பொழிகிறது. (ஐ)

# ஆப்கன் அகதிகள்

## துர்க்மெனிஸ்தான் நோக்கி ஓட்டம்

காபூல். ஜூன் 26

ஆப்கானிஸ்தானில் நடக் கும் சண்டையிலிருந்து தப்பு வதற்காக சுமார் 4 ஆயிரம் ஆப்கானிஸ்தான் அகதிகள் முன்னாள் சோவியத் நாடான துர்க்மெனிஸ்தான் நாட்டுக்குள் சென்றுள்ளனர்.

இவ்விதம் தப்பியோடிச் சென்றுள்ள மக்களில் பெரும் பாலானவர்கள் பெண்களும் முதியவர்களும் என்றும் — அவர்களில் பலர் காயம டைந்துள்ளனர் என்றும் — ஐ. நா. அகதிகள் அமைப்புக் கூறியுள்ளது. இந்த அகதி களைத் திருப்பி அனுப்பு வதற்கு துர்க்மெனிஸ்தான் முயன்று வருவதாக ரஷ்ய செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது. (ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களைப் படையில் சேர அழைக்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன் 26

''இளைஞர்கள் இராணுவத்தில் சேர்ந்து நாட்டுக்குச் சேவை செய்ய முன்வர வேண்டும்.''

இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தியத்தலாவ இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் மத்தியில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

குறித்த ஓர் இனத்துக்கு எதிராக நாம் போராட்டத்தை நடத்தவில்லை. இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்காகவே போராடுகிறோம். இதில் நிச்சயம் வெற்றி காண்போம்.

நாட்டின் ஒருமைப்பாட்டையும், இறைமையையும் சிதறடிக்க எந்தச் சக்திக்கும் இடமளிக்கப்போவதில்லை—

இப்படி அவர் மேலும் கூறினார்.

(ஜனாதிபதியின் உரையின் ஒரு பகுதி உதயனில் ஏற்கனவே வெளிவந்தது குறிப்பிடத்தக்கது)


## Vacancies for SECURITY GUARDS

We require smart men for employment as Security Guards.

REQUIREMENTS:

1. Minimum Height : 5'–3"
2. Age : 30 years to 55 years
3. Qualification : G. C. E. (O/L)
4. Ex-Servicemen or Ex-Police personnels will be an advantage.
5. Preference to those residing within the Jaffna Municipal Limits.

Interview on 28-06-97 at 10.00 a.m (New Time)

**Golden Eagle Security Services**
**No. 361, Kasthuriar Rd, Jaffna.**



## பனை அபிவிருத்திச் சபை
### புளுக்கொடியல், சுளகு கொள்வனவு

தரமான புளுக்கொடியல், சுளகு ஆகியன திருப்திகரமான விலையில் பனை அபிவிருத்திச் சபையால் கொள்வனவு செய்யப்படும்.

மேற்படி பொருள்களின் உற்பத்தியாளர்கள் சபையுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். கொள்வனவுக்கான கொடுப்பனவு உடனுக்குடன் வழங்கப்படும்.

**பொது முகாமையாளர்,**
பனை அபிவிருத்திச் சபை,
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-998)



யாழ். வண். கிழக்கு கலட்டி
## ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில்
ஈசுர வருஷ
## மஹோற்சவ கால விசேட உற்சவ விஞ்ஞாபனம்

**27-06-97** முதல் **11-07-97** வரை (பதினாறு தினங்கள்)

27 ஆம் திகதி காலை 7.00 மணிக்கு விநாயகர்வழிபாடு, அநுக்ஞை, வாஸ்து சாந்தியுடன் விழா ஆரம்பமாகும்.

தினமும் மாலை 4.30-க்கு அபிஷேகம், பூஜையும், தினமும் மாலை 5.30-க்கு உற்சவ மூர்த்தி பூஜையும் நிகழ்ந்து சுவாமி உள்வீதி வலம் வருவார்.

சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள்
பிரதம குருவும், ஆதீன கர்த்தாவும்.

(48014)



## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
**The Jaffna Education Centre**
(சாந்தி சினிமா முன்பாக)

ஆண்டு 5-10, O/L
**Spoken English**
**With**
**Grammar**
சிங்களம்

Shorthand & Typing ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்: 28-06-97

- நிர்வாகி

(48009)


## சமய நந்திகளில்

கொழும்புத்துறை, ஜூன் 26

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் காலை 9-00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை ''திவ்வியப் பிரபந்தம்'' 51 பாடல்கள் வாசித்துப் பயன் சொல்லல் நிகழ்வு நடைபெற்று வருகிறது.

(ஐ-30)

★ ★ ★

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு 1008 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. அன்று பிற்பகல் 5 மணிக்கு விநாயகர் வீதி உலா வருவார்.

(ஐ-90)

★ ★ ★

பருத்தித்துறை சிவன் கோயில் புலோலி பார்வதவர்த்தனி சமேத ஸ்ரீ பசுபதீஸ்வரர் தேவஸ்தானத்தின் வருடாந்த உற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 16 தினங்கள் உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதி சிவன் இரதோற்சவமும், மறுநாள் தீர்த்த உற்சவமும் மாலை திருவூஞ்சல், கொடியிறக்கம் ஆகியனவும் இடம்பெறும்.

(ஐ-30)

★ ★ ★

வட்டுக்கோட்டை காசி விசாலாட்சி சமேத காசி விஸ்வநாதர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

(ஐ-90)

## குருநகர் ஆஸ்பத்திரிக்கு நீர்த் தாங்கி

குருநகர், ஜூன் 26

குருநகர் அரச மருத்துவமனையில் யாழ். மாநகர சபையின் நீர்வழங்கல் பிரிவினால் குடிதண்ணீர் தாங்கி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

(ஐ-51)

## விவசாயிகள் விவரம் சேகரிப்பு

நவாலி, ஜூன் 26

மீளக்குடியமர்ந்த உயரப்புலம் ஆனைக்கோட்டைப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தமது விவரங்களை ஆனைக்கோட்டை மகாஜனா சனசமூக நிலையத்திற்கு வந்து பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விவசாய உள்ளீடுகளை வழங்குவதற்கு இது உதவி [illegible] விவசாய சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர்.

(ஐ-100)

சாவகச்சேரி நகரசபை

## விளையாட்டு மைதானத்தை பயன்படுத்த விரைவில் அனுமதி

தென்மராட்சி, ஜூன் 26

சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில்விரைவில்பாடசாலை மாணவர்களும், விளையாட்டுக் கழகங்களும் பயிற்சி பெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது இந்த விளையாட்டு மைதானம் துப்புரவு செய்யப்படுகிறது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் தொடக்கம் மைதானத்தில் போட்டிகளை நடத்த அனுமதி வழங்கப்படும் என்றும்—

அதற்கு முன்னர் சிவில் நிர்வாக அதிகாரியின் அனுமதி பெற்று அங்கு மாணவர்கள் பயிற்சியில் ஈடுபடலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

தென்மராட்சி பிரிவில் உள்ள பாடசாலைகளுக்கு வழங்கவென கரபந்தாட்ட, வலைப்பந்தாட்ட பந்துகளும், கிரிக்கெட்விளையாட்டு உபகரணங்களும் கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு சாவகச்சேரி சிவில் நிர்வாக அதிகாரி கப்டன் ஹலன்கொடவினால் வழங்கப்பட்டுள்ளன.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் சிவில் நிர்வாக அலுவலகத்திற்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில் கழகங்களுக்கு இந்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும் எனவும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-117)

## இளவாலைக்கான பஸ் சேவை இன்னும் ஆரம்பமாகவில்லை
### மாணவர்கள் உத்தியோகத்தர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

இளவாலைப் பகுதியில் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற பஸ் வண்டி மீதான குண்டுத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து அப்பகுதிக்கு அன்றிலிருந்து பஸ் போக்குவரத்துச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பஸ் வண்டிச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதால் மாதகல், இளவாலை, மாரீசன்கூடல் பகுதி மக்கள் தமது அத்தியாவசிய பிரயாணங்களை மேற்கொள்ள முடியாத கஷ்ட நிலை ஏற்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள், நோயாளர்கள் உட்பட அப்பகுதி மக்கள் தமது நாளாந்தப் பிரயாணத்தை மேற்கொள்ள முடியாது மிகுந்த சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

இந்நிலை பற்றி வடபிராந்திய போக்குவரத்துச் சேவை பொது முகாமையாளரிடம் தெரிவித்தபோது—

அப்பகுதிக்கு மீண்டும் பஸ்சேவை நடத்துவதற்கான நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட உள்ளன. முதற்கட்டமாக மல்லாகம் வரை சேவையை ஆரம்பித்து, பின்னர் படிப்படியாக மீண்டும் மாதகல், இளவாலை சேவை தொடங்கப்படும் — என்று தெரிவித்தார்.

(ஐ-15)


## லலிதா திருமண சேவை

என்னிடம் மணமகனுக்குரிய ஜாதகங்கள் உண்டு. வெளிநாட்டிலோ, உள் நாட்டிலோ பொருத்தமான மணமக்களைத் (பெண்கள் 67 ஆம் ஆண்டுக்கு பிற்பட்டவர்கள்) தேர்ந்தெடுப்பதற்கு 25-06-97 தொடக்கம் 2-07-97 வரை தொடர்பு கொள்ளலாம்.

நாகலிங்கம் கந்தையா
லலிதா திருமண சேவை
மூத்த நயினார் கோயில் வடக்கு வீதி,
ஆனைக்கோட்டை.

[47292]


## ஓராண்டு நினைவலைகள்



## திருமதி நவரட்ணராஜா புஷ்பராணி

மலர்வு: 03-09-1958
உதிர்வு: 12-07-1996

கட்டிய கணவரோடும் கவினுறு மக்களோடும்
ஒட்டிய உறவில் வாழ்ந்து உலகினில் புகழ்சமைத்து
மட்டிலாப் பெருமைதந்த மாதவத் தாயே - உந்தன்.
பட்டியல் ஓராண்டைப் பண்புடன் நினைவுகூர்வோம்.

கணவர்: வயறிங் நவம்,
மக்கள், சகோதர, சகோதரிமார்,
குடும்பத்தினர்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(சி/1004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திச் சாரம்

### மாதாந்த உதவிப்பணம்

தென்மராட்சி, ஜூன் 26

தென்மராட்சி பிரதேச மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் மற்றும் காசநோய், புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கான ஜூன் மாதக் கொடுப்பனவுகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை—

தென்மராட்சி பிரதேசத்தில் தங்கியுள்ள தெல்லிப்பழை, உடுவில் ஆகிய பிரதேச செயளர் பிரிவுகளைச் சேர்ந்த மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களின் ஜூன் மாதக் கொடுப்பனவும் அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

### பஸ் நிலையத்தில் பாற் சாலை

திருநெல்வேலி, ஜூன் 26

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பாற்சாலை ஒன்றை அண்மையில் திறந்துள்ளது. காய்ச்சிய பால் ஒரு கப் ஆறு ரூபாவாக இங்கு விற்கப்படுகின்றது. நீண்டநேரம் பஸ்சுக்கு காத்து நிற்கும் பிரயாணிகளுக்கு இது மிகவும் வசதியாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-135)

### புனரமைப்பு

திருநெல்வேலி. ஜூன் 26

உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கம் அண்மையில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. வலி-தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். சிறிபதி தலைமையில் நடைபெற்ற இப்புனரமைப்பு கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம் பெற்றது.

(ஐ-135)

### பவள விழா வைபவம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற கணித ஆசிரியர் க. நடராசாவின் பவளவிழாவை ஒட்டிய வைபவம் கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட பலர் அந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். இளைப்பாறிய ஆசிரியர் ஆசிரியமணி சி. நாகலிங்கம் பவள விழா வாழ்த்துக் கவிதையை வழங்கினார். பலர் வாழ்த்துரை ஆற்றினர்.

(ஐ-4)

### இலவச ஆங்கில வகுப்பு

சாவகச்சேரி, ஜூன் 26

இளைஞர் சேவைகள் மன்றத்தின் மீசாலைப் பிரிவினரால் படித்த இளைஞர், யுவதிகளுக்கான இலவச ஆங்கில வகுப்பொன்று கடந்த 23ஆம் திகதி தொடக்கம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்ப வகுப்பில் சுமார் 35 இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர். இவ்வகுப்பு கிழமை நாள்களில் பிற்பகலில் 3 மணி தொடக்கம் 5மணி வரை தொடர்ந்து 6 மாதங்கள் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-31)

# புதிய தேர்தல் முறை பற்றி 10 நாள்களில் அறிவிப்பு

## பேராசிரியர் பீரிஸ் தகவல்

கொழும்பு. ஜூன் 26

புதியதொரு தேர்தல் முறையை அரசாங்கம் அடுத்த 10 நாள்களுக்குள் அறிவிக்க உள்ளது. அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழு இந்த யோசனைகளை அங்கீகரித்துள்ளதாக நீதி, அரசியல்யாப்பு, இனவிவகார, தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

புதிய யோசனைகளின் படி எதிர்காலநாடாளுமன்றத்தில் 198 ஆசனங்கள் இருக்கும். தேர்தல் மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தி 99 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர் ஏனைய 99 உறுப்பினர்களும் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் தெரிவு செய்யப்படுவர்.

வாக்காளர்கள் தங்களுக்கு விருப்பமான உறுப்பினர் ஒருவரை தேர்தல் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்து கொள்ள முடியும்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் சார்பில் ஐ. தே. க நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. சி. எஸ். ஹமீட், உத்தேச விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை தாம் ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளார் என இலங்கை வானொலி அறிவித்தது.

(ஐ-5)

# இலங்கையின் சனத்தொகையில் பெண்களை விட ஆண்கள் அதிகம்

கொழும்பு, ஜூன் 26

இலங்கையின் சனத்தொகையில் தற்போது பெண்களிலும் பார்க்க ஐந்து லட்சம் ஆண்கள் அதிகமாக உள்ளனர் என குடிசன மதிப்பு புள்ளி விவரத் திணைக்களத்தின் சமீபத்திய புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது நாட்டின் சனத்தொகை ஒரு கோடியே 72 லட்சமாக அதிகரித்துள்ளது. இவர்களில் 52 சதவீதமானோர் நாட்டின் 23 சதவீத நிலப்பரப்பில் வாழ்கின்றனர்.

கொழும்பு நகரில் சனத்தொகை மிகக் கூடிய வீதத்தில் அதிகரித்து வருகிறது. ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 3 ஆயிரத்து8 பேர் வாழ்வதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. மதிப்பீடுகளின்படி இலங்கையில் 92 லட்சம் ஆண்களும் 87 லட்சம் பெண்களும் வாழ்கின்றனர்.

வடக்கு—கிழக்கில் இடம்பெற்றுவரும் யுத்தம் காரணமாக அப்பகுதியில் புதிதாக மதிப்பீடுகளை மேற்கொள்ள முடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடிசன மதிப்பு புள்ளி விவரத் திணைக்களத்தின் புள்ளி விவரங்களின்படி 15.1 லட்சம் பேர் வடக்கு— கிழக்கில் வாழ்கின்றனர்.

யுத்தம் காரணமாக வடக்கு— கிழக்கில் இருந்து யுத்தம் இடம்பெறாத பிரதேசங்களுக்குப் பலர் இடம் பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மன்னார் மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் குடிசனச் செறிவு மிகவும் குறைவாகவே உள்ளது எனவும், அங்கு ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 70 பேர் மாத்திரமே வாழ்வதாகவும் அந்தத் தகவல் தெரிவிக்கிறது.

(ஐ-10)

# பொலீஸ் களஞ்சியத்தில் இருந்து ஆயுதங்கள் விற்றது கண்டுபிடிப்பு

## பொறுப்பதிகாரி உட்பட 7 பேர் கைது

கொழும்பு, ஜூன் 26

குளியாபிட்டி பொலீஸ் ஆயுதக் களஞ்சிய பொறுப்பதிகாரி தனது பொறுப்பிலிருந்த 15 தானியங்கித் துப்பாக்கிகளையும் ஐந்து தோட்டாத் துப்பாக்கிகளையும் பாதாள உலகக் கும்பலுக்கும் இரு அரசியல்வாதிகளுக்கும் விற்பனை செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இத்தகவல்கள் பொலீஸ் திணைக்களத்தைத் திடுக்கிட வைத்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆயுதங்களை விற்றதன் மூலம் களஞ்சியப் பொறுப்பதிகாரி 2 லட்சம் ரூபாவை சம்பாதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல ஆண்டுகளாக நடைபெற்று வந்த இந்த ஆயுத வியாபாரம் பொலீஸ் உயர் அதிகாரிகளுக்கு எவ்வாறு தெரியாமல் போனது என்பது வியப்புக்குரியது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் பொலீஸ் குழுவினர் ஆயுதக் களஞ்சியத்திற்குப் பொறுப்பாயிருந்த பொலீஸ் உத்தியோகத்தரைக் கைது செய்துள்ளனர். விசாரணையின் போது அவர் வெளியிட்ட தகவல்களை அடுத்து ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் விற்கப்பட்டதாகக் கூறப்படும் சில துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

(ஐ-10)

# கிளாலிப் பகுதி மக்கள் குடியேற முடியாத நிலை

தென்மராட்சி, ஜூன் 26

இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்று தற்போது அங்கிருந்து திரும்பியுள்ள கிளாலி கரையோரப்பகுதி மக்கள் தங்கள் சொந்த இடத்தில் மீளக்குடியேற முடியாத நிலையில் உள்ளனர்.

கிளாலிக் கடலை அண்டிய பகுதியில் இருந்த இவர்களது வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. அப்பகுதி பாதுகாப்பு பிரதேசமாக முட்கம்பி எல்லையிடப்பட்டிருக்கிறது. இதனால் அப்பகுதியைச் சேர்ந்த குடும்பங்கள் தமது உறவினர் நண்பர்களது வீடுகளில் தங்கியுள்ளன.

(ஐ-118)

# தீவுப் பகுதிக்கு மேலும் இரு பஸ் சேவைகள்

யாழ்ப்பாணம், ஜூன்26

தீவுப்பகுதிக்கான போக்குவரத்தினை மேற்கொள்ளும் மக்களின் நலன் கருதி, வட பிராந்திய போக்குவரத்துச் சபையினர், அப்பகுதிக்கு மேலும் இரண்டு பஸ்சேவைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஊர்காவற்றுறையில் இருந்து காலை 7.30 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கி ஒரு பஸ் சேவையும் [illegible]

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறைக்கு காலை 7.45-க்கு ஒரு பஸ் சேவையும் இடம் பெறும்.

காலை 8.45 மணிக்கு மற்றொரு பஸ் யாழ்ப்பாணத்தில் இருந்து அங்கு புறப்படும்.

8.45 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் பஸ் 780 ஆம் இலக்க வழியூடாக ஊர்காவற்றுறை [illegible] போக்குவரத்துச் சபை முகாமையாளர் தெரிவித்தார்.

(ஐ - 15)

### உணவு முத்திரை விநியோகம்

நவாலி, ஜூன் 26

நவாலி தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரண உணவு முத்திரைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

இவற்றைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் கிராம சேவையாளர் அலுவலகத்தில் வந்து பெற்றுச் செல்லுமாறு அப்பகுதி கிராம சேவையாளர் கேட்டுள்ளார்.

(ஐ 100)

### விசேட அ. அட்டைகள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன்26

யாழ்ப்பாணம் அத்தியடி (ஜே - 78) கிராம அலுவலர் பிரிவுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள இராணுவ அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திச் சாரம்

### பாற்குளம் ஆழமாக்கப்படும்

திருநெல்வேலி, ஜூன் 26

யாழ். பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஈச்சமோட்டை பாற்குளம் ஆழமாக்கப்பட்டு புனரமைப்பு செய்யப்படவுள்ளது. இதற்கென யாழ். பிரதேச செயலரினால் 75 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது இக்குளத்தில் தண்ணீர் இருப்பதாகவும் வற்றியவுடன் ஆழமாக்கும் பணி நடைபெற விருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

### நூல் கொள்வனவுக்கு நிதி உதவி

திருநெல்வேலி, ஜூன் 26

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்திற்கு புதிய நூல்கள் கொள்வளவு செய்வதற்கு யாழ். பிரதேச செயலகத்தினால் 25 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

### உப அதிபர் நியமனம்

குருநகர், ஜூன் 26

யாழ். மத்திய கல்லூரியின் உப அதிபராக எல். ஓங்கார மூர்த்தி வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ். மத்திய கல்லூரியில் பல ஆண்டுகளாக உதவி ஆசிரியராகக் கடமையாற்றி வந்தார்.

(ஐ-51)

### தேவாலயத்தில் திருட்டு

நவாலி, ஜூன் 26

மானிப்பாய் புனித அன்னம்மாள் தேவாலயத்தில் கடந்த 21 ஆம் திகதி இரவு பெறுமதிமிக்க பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

ஆலயக் கதவை உடைத்து உள்ளே புகுந்த திருடர்கள் அங்கிருந்த ஒலிபெருக்கி உபகரணங்கள் மற்றும் உண்டியலில் வைக்கப்பட்டிருந்த பணம் என்பனவற்றை எடுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-100)

### பாராட்டு வைபவம்

குருநகர், ஜூன் 26

சமாதான நீதிவானாக அண்மையில் நியமனம் பெற்ற சி. தவரட்ணத்தையும் யாழ். மாவட்ட சாரண சங்கத்தின் ஆணையாளராக நியமிக்கப்பட்ட இ. டோறஸ் ராஜசிங்கத்தையும் கௌரவித்து குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அண்மையில் பாராட்டு வைபவம் ஒன்றை நடத்தியது.

அவ் வைபவத்தில் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி உறுப்பினர்களும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

(ஐ-51)

### பாடசாலை திருத்தப்படும்

குருநகர், ஜூன் 26

இராணுவ நடவடிக்கை காரணமாகச் சேதமடைந்துள்ள பாசையூர் சென். அன்ரனீஸ் றோ. க. வித்தியாலயத்தின் கட்டடங்களை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் மூலம் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் அங்கு அண்மையில் நடைபெற்றது.

(ஐ-51)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பல இன வளர்ப்பு மீன்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. கமலேஸ்வரி (குட்டி), 588/8, நாவலர் வீதி, (ஸ்ரான்லி கல்லூரி முன் ஒழுங்கை), காலை 11-00, மணியில் இருந்து பார்வையிடலாம். [47938]

வீட்டுத்தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, T.V, கடைக்குரிய அலுமாரி, சோக்கேஸ், விறாக்கிகள் இன்னும் பல. உடன் தொடர்பு: 07, கைலாச பிள்ளையார் கோயிலடி பின் வீதி, நல்லூர், [47999]

### தவறிவிட்டது

ஐயாத்துரை அழகம்மா என்பவருடைய (39597054 2 V) இலங்கை தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, பாஸ் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நாவற்குழி சங்கக் கடையில் ஒப்படைக்கவும். [48011]

### கணிதம், விஞ்ஞானம்

ஆண்டு 11 மீட்டல் துரிதமாக ஆண்டு 6 – 10 விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் இரண்டாம் தவணைப்பரீட்சைக்கு கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன்கோயிலடி, சிவன்கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [48006]

## கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

சமூகவிஞ்ஞானப் பிரிவின் தலைவர் என். சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் 'சிறுபான்மையோர் நோக்கில் இலங்கையின் இன்றைய தேர்தல் முறையும் அதில் ஏற்படுத்தக் கூடிய மாற்றங்களும்' என்னும் தலைப்பில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுவார்.

(ஐ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 26

வடமராட்சி வாண்மையாளர் அமைப்பகத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலைய மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிறு மு.ப 10 மணிக்கு கருத்தரங்கு ஒன்று இடம்பெறவுள்ளது.

'பிராந்திய நிர்வாகத்தில் அதிகாரப் பரவலாக்கலும் வினைத்திறனும்' எனும் பொருளில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்படி கருத்தரங்கில் உரையாற்றவுள்வார்.

(ஐ)

### நீடிக்கப்பட்டுள்ளது

**கல்வயல் இந்து இளைஞர் மன்ற**

**தங்கப்பதக்க பரிசிலுக்குரிய திருவாசகப்போட்டி**

30 - 06 - 97 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி JST புத்தகசாலையில் படிவம் பெற்று விண்ணப்பிக்கலாம்.

செயலாளர்

(48015)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| புவனத்தில்: | ககனத்தில்: |
|---|---|
| 08 | 28 |
| 06 | 05 |
| 1926 | 1997 |

### திருமதி பாலசுப்பிரமணியம் கமலசுந்தரி அம்மா

பாரினில் பால்நிலவும் பண்புமிக்க பனிநிழலாய்
பேரினில் பெட்பமைந்த பேச்சுயர்த்த கமலமலராய்
ஊரினில் உற்றார்க்கு உவந்தளிக்கும் உயர் அரிவையாய்
சீரினில் சிறந்து விளங்கியவள் தான் சென்ற விடமெங்கே?

மாதாவாய் நீ ஊட்டிய ஆண்மை அத்தனையும் அகன்றதம்மா!
பாதாதி கேசம் வரையான கைவண்ணமத்தனையும் அழிந்ததம்மா!
போதாகி மலர்கின்ற நின் புத்திர பௌத்திர சுற்றமெல்லாம்
மாதா நின்னிடத்தில் நாம் கேட்கும் நலம் நல்கிடவேண்டுமம்மா!

எமதில்லத்தில் நாளை 27 - 06 - 97 வெள்ளிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டி வைபத்திலும், மதிய போசனத்திலும், கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

ஆலடி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(47807)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில்: | இறைவன் அடியில்: |
|---|---|
| 06 | 07 |
| 01 | 07 |
| 1980 | 1996 |

### செல்வன் சுகல்ஜன் சபாரத்தினம்

**திதி: 26 - 06 - 1997**

அன்பிற்கு உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
இன்முகம் காட்டி இனிய கதை பேசும் சுகலாவே
உன் கலகலப்பான கதைகள் கேட்காத காலமோ ஓராண்டு
இளநகை பூத்த எம் இளையவனே எங்குதான் சென்றாயோ?
வளமாக வாழ்ந்த வயதோ பதினாறு
தினம் தினம் உன் நினைவில் திளைத்து வருந்துகின்றோம்
மனம் என்னும் பொறியில் கல்லைப்போட்டாலும்
நினைவலைகள் எம்மை நிதம் நிதம் வருத்துகிறது.
சுகலா நீ எம்முடன் வாழப்பணித்த பரமன் பாதியில் பறித்தானே!
எம் சுற்றம் வருந்த எங்குதான் சென்றீரோ?

உன்பிரிவால் உளம் வருந்தி உன் ஆத்மா சாந்தியடைய ஆனி இருபத்தாறில் ஆண்டவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

தந்தை: க. சபாரத்தினம் (தபால் அதிபர்)
தாய்: ச. ஜெயாநிதி
சகோதரர்கள்: ச. சுகானி, ச. சுஜீபன்
அம்மம்மா: இ. தங்கம்மா.

க. சபாரத்தினம்,
(தபால் அதிபர்)
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

(சி/993)

---

**மீண்டும் யாழ். குடாநாட்டில்**

- ★ அரிக்கன் லாம்புகள்
- ★ மேசை லாம்புகள்
- ★ சிம்னிகள், ★ திரிகள்,
- ★ காய்கள்

விற்பனை விநியோக சேவையில்

**அ. குமார்**
**455, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குடா நாட்டின் எந்தப்பகுதியில் உள்ள கடைகளுக்கும் நேரில் சென்று விநியோகம் செய்யப்படும். தொடர்பு கொள்ளவும்.

(சி/1003)

---

## கண்ணீர் அஞ்சலி

**செல்வி கலாமாலினி நாகரட்ணம்**
ஆசிரியையின் அன்புத்தாயார்

### திருமதி இலட்சுமிப்பிள்ளை நாகரட்ணம்

அவர்களின்

மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.

**பண்டத்தரிப்பு உயர்தர பாடசாலை.**
பண்டத்தரிப்பு.

(48013)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் கந்தையா விநோகரன்

(புன்னாலைக் கட்டுவன் தெற்கு)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 22 - 12 - 1945 | 27 - 05 - 1997 |

**திதி: 26 - 06 - 97**

அன்பான அப்பாவே! ஆருயிர்த் தெய்வமே!
பாசத்தின் உறைவிடமே
எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
சென்று விட்டாயே அப்பா!
எங்கள் அன்புச் செல்வமே – நீ
தெய்வமாகி விட்டாய்;
உன் ஆத்மா சாந்தியடைய ஆயாக்கடவை
ஐங்கரனைப் பிரார்த்திக்கின்றோம்,

இன்று 26 - 06 - 97 வியாழக்கிழமை அன்னாரில் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமகன், தாய், சகோதரர்கள்.

V. சுதர்சினி, (மகள்)
புன்னாலைக் கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

(48016)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பிந்திய ஞானம்

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்த பின்னர், அந்த அரசு இனப்பிரச்சினைக்கான தீர்வெனக்கூறி திட்டம் ஒன்றை முன் வைத்த பின்னர்—

தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சி உருப்படியான, காத்திரமான முடிவு ஒன்றை முதன்முறையாக எடுத்துள்ளது.

அரசாங்கம்உடனடியாகப் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி அவசர காலச் சட்ட நீடிப்புப் பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பது என்பதே அந்த முடிவாகும்.

இனப் பிரச்சினைக்கு சமாதான வழியில் நியாயமான அரசியல் தீர்வைக் காண்பதாகக் கூறி, தென்னிலங்கை வாழ் தமிழர்களின் வாக்குகளையும் பெற்றுப் பதவிக்கு வந்த அரசும் ஜனாதிபதியும் —

போரைத் தீவிரப்படுத்தி இராணுவத் தீர்வை முன்னெடுக்கும் விதத்தில் அதற்கே முன்னுரிமை கொடுத்துச் செயற்படத் தொடங்கிய போதே —

தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டுமன்றி நாடாளு மன்றத்தில் அங்கம் வகிக்கும் எல்லாத் தமிழ்க் கட்சிகளும் அவசர காலச் சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களிக்க வேண்டும்—என்பதே தமிழ் மக்களின் விருப்பமாக இருந்து வருகிறது.

வெளி உலகத்துக்குக் காட்டிக் கொள்வதற்காக, அவற்றின் ஆதரவையும் உதவிகளையும் பெறுவதற்காக, பெயருக்காக அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் வைத்து விட்டு—

அதில் முழு அக்கறையாக இருந்து இறுதி வடிவம் கொடுத்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காமல், அதற்கென ஒரு கால அட்டவணையைத் திட்டவட்டமாக வகுக்காமல், மாதங்களைக் கடத்திக் கொண்டே —

விடுதலைப்புலிகளைத் தோற்கடித்த பின்னரே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று மேடைகளில் பேசுவது மட்டுமன்றி, அந்த வழியையே முழுக்க முழுக்க நாடி நிற்பதை — உணர்ந்துள்ள தமிழ் மக்கள், கூட்டணி இப்போது எடுத்துள்ள முடிவை பல மாதங்களுக்கு முன்னரே செயற்படுத்தியிருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள்.

எப்போதுமே செய்யாதிருப்பதை விடப் பிந்தியாவது செய்வது பரவாயில்லை என்பார்கள். அந்த வகையில் இப்போதாவது, பிந்தியாவது கூட்டணிக்கு ''அரசியல் ஞானம்'' பிறந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

முந்திய தமிழ்த் தலைவர்களைப் போலவே தாமும் ஏமாற்றப்படலாம் என்ற அச்ச உணர்வு கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரத்தை உள்ளூர உறுத்துவதை அவர் பி. பி. ஸியின் தமிழோசைக்கு வழங்கிய செவ்வி கோடி காட்டுகிறது. அதனால் கூட்டணியின் பிந்திய முடிவு மாற்றப்பட மாட்டாது என்று நம்பலாம்.

அவ்வாறாயின், நாடாளு மன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய இரண்டு தமிழ்க் கட்சிகளும் எங்கே நிற்கின்றன? என்ன செய்யப் போகின்றன? அடம்பன் கொடியும் திரண்டால் தான் மிடுக்கு!

# யாழ்.மாவட்ட புனரமைப்பு பணியில்

# அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம்

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் யாழ். மாவட்டத்தில் 87/88 ஆம் ஆண்டுகளில் இந்திய இலங்கை ஒப்பந்த காலத்தில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது.

பின்னர் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக அதன் செயற்பாடுகள் இம்மாவட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

எனினும் 1995 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை, மக்களுடைய இடம் பெயர்வு காரணமாக மனித நேயத்துடன் சேவை செய்வதற்கு இந்நிறுவனம் ஈடுபடத் தொடங்கியது. தனது உத்தியோகத்தர்களையும் அதிகரித்தது. எனினும் 1995 ஒக்ரோபர் மாதம் மாவட்டத்தில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வின்போது, இந் நிறுவனம் இடம்பெயர்ந்து தற்காலிகமாக பருத்தித் துறையில் இருந்து இயங்கத் தொடங்கியது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் கடமைப்பாடு அல்லது செயற்பாடுகளில் முக்கியமானது இடம் பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான நடவடிக்கைகளே.

அவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல், அவர்களைப் பழைய வாழ்வு நிலைக்குக் கொண்டு வருதல் இவற்றுள் முக்கியமானவை.

இம்மாவட்டத்தில் ஏற்பட்ட அவலநிலையைக் கருத்திற்கொண்டு, மாவட்டத்துக்கு உள்ளே இடம் பெயர்ந்த மக்களுக்கான உணவுசாரா உதவுபொருள்களை வழங்கியமை—

அத்தியாவசிய, மனிதநேய உதவி செய்தல் —

அவசியமான உணவுக் களஞ்சியங்களை அமைத்துக் கொடுத்தல்—

தற்காலிக வீடு வசதி, கூடாரம், பிளாஸ்ரிக் பாவனைப் பொருள்கள் ஆகியவற்றை இடம்பெயர்ந்த காலங்களில் பொதுமக்களுக்கு வழங்கியமை— இதன் பணிகளில் சில ஆகும்.

1996 ஆரம்பத்திலேயே மக்கள் இடம்பெயர்ந்தபோது இடம்பெயர்ந்த மக்களினிடையே சிறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி அவற்றின் மூலம் மக்களுக்கு ஏற்பட்ட அவலங்கள், துன்ப, துயரங்களைக் குறைக்க இந்த நிறுவனம் உதவியது.

1. குடிதண்ணீர் வழங்கல்.

2. உள்ளூர் வீதிகளைச் செப்பனிடல்.

3. குடியிருப்புக்களை அமைத்துக் கொடுத்தல் என்பனவற்றுக்கு ஆர்வங்காட்டப்பட்டது.

1996 ஏப்ரல் மாதம் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக இத்திட்டங்களை மீளக்குடியமரும் மக்களுக்குப் புதிய மெருகுடன் வழங்க இந்நிறுவனம் முன்வந்துள்ளது.

ஏறக்குறைய 2, 61, 780 மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு அரசாங்கம் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் உதவி இம் மக்களுக்கு உடனடியாகக் கிடைக்காத இந் நிலையில் இந்த நிறுவனம் 1996 ஜனவரி மாதத்தில் 21 சிறுதிட்டங்களை இம்மாவட்டம் முழுவதற்கும் செயற்படுத்துவதற்கு முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 1,05,10,055/- ரூபா பணம் செலவு செய்யப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் மீளக் குடியேறிய மக்களுக்கு குடிதண்ணீர்வசதி(குறிப்பாக தீவக மக்களுக்கு) செய்து கொடுக்கப்பட்டது. யாழ். மாநகர சபையின் கழிவுகளை அகற்றுவதற்கான உழவு இயந்திர வசதி செய்யப்பட்டது. வேலணை வைத்திய சாலை புனரமைக்கப்பட்டது.

யாழ். மாநகர சபை சுகாதார தொண்டர்களைப் பயிற்றுவித்தல் மந்திகை, அச்சுவேலி ஆகிய கிராமிய சந்தைகளைப் புனரமைத்தல், கோப்பாய், அச்சுவேலி, நீர்வேலி, உரும்பிராய், வரணி ஆகிய சனசமூக நிலையங்களை அபிவிருத்தி செய்தல், நீண்டகாலமாக மக்களுக்குப் பெரும்பிரச்சினையாக இருந்த கழிவுவாய்க் கால்களை பருத்தித்துறை, கரவெட்டி, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களில் திருத்தி அமைத்தல் அத்துடன் தென்மராட்சி, தீவகம் ஆகியபிரதேசங்களில் பரீட்சார்த்தமாக இலவச விதை கிழங்குகளை வழங்கி செய்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல், கால் நடைத்துறையில் கோழிக்குஞ்சு விநியோகம், கிராமிய கால்நடை அபிவிருத்தி நிலையங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்கு இந்த நிறுவனம் மூலம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக யுத்தத்தினால் பாரியளவு பாதிக்கப்பட்ட புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி இந் நிறுவனத்தின் நிதி உதவியுடனும், பொதுமக்களின் உதவியுடனும் திருத்தி அமைக்கப் பட்டது.

### மக்களின் பங்களிப்பு

இத்திட்டத்தில் மக்கள் கண்ட அனுபவம் முக்கியமாக ஒப்பந்த அடிப்படையின்றி வேலைத் திட்டங்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றிற்கான மூலப் பொருள்களை இனங்கண்டு, இவ்வேலைகளில் தாமும் பங்காற்றியதே.

புனரமைக்கப்படுகின்ற சொத்தை தமது சொந்தச் சொத்தாகக் கருதி தொடர்ந்தும் பராமரித்தல் இதில் முக்கியமாகும்.

இவ்வேலைத் திட்டங்களை ஆரம்பிக்கும்பொழுதும் அவர்கள் மக்களோடு சேர்ந்து செயற்படுத்தும் பொழுதும், பின்னர் அவற்றை முடிக்கின்ற செயற்பாட்டைக் கொண்டுவரும் பொழுதும் மக்கள் இதை தம்முடைய சொத்து என்ற மனப்பாங்குடன் மகிழ்ச்சியாக ஏற்கும் நிலை உருவாகிறது.

இந்நிலை 1997 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து இம் மாவட்ட மக்களுக்கு கிடைத்தமை மாபெரும் வரப்பிரசாதமாகும். இவ்வருட ஆரம்பம் ஏப்ரல் மாதத்திலேயே 16 திட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இதில் பலராலும் நீண்ட நாள்களாக எதிர்பார்க்கப்பட்ட குருநகர் துறைமுக அபிவிருத்தி, காரைநகருக்கான நீர் விநியோகம், ஊர்காவற்றுறை பொதுச்சந்தை புனரமைப்பு ஆகிய திட்டங்கள் முக்கியமாகும்.

இதனைவிட மேலதிகமாக ரூபா 2 கோடி 20 லட்சத்துக்கான வேலைத் திட்டங்கள் பொது மக்களினால் இனங் காணப்பட்டு உள்ளன.

மீளக்குடியேறுவதற்கு யாழ். மாவட்டத்துக்கு வருகின்ற மக்களை தற்காலிகமாக தங்கவைக்க காங்கேசன் துறை, குருநகர் ஆகிய இடங்களில் தற்காலிக தங்குமிடங்களைத் திருத்தி அமைப்பதற்கும் [illegible] கொடுப்பதற்கும் இந்நிறுவனம் முன்வந்துள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக தற்பொழுது தெல்லிப்பழை, தீவகம் ஆகியபிரதேசங்களில் மீளக்குடியமர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பத்தாயிரம் குடும்பங்களுக்கான உடனடி குடியிருப்பு வசதி, பாடசாலைகள், போக்குவரத்து வசதி என்பன செய்து கொடுப்பதற்கு பெருந்தொகையான பணத்தை முதலீடு செய்வதற்கு இந்நிறுவனம் இணக்கம் கண்டுள்ளது.

பாரிய இடப்பெயர்வினால் அல்லற்பட்டு, மீளக்குடியமர மிகச்சொற்பமான நிவாரண உதவிகளை மாத்திரம் பெறுகின்ற இக் குடும்பங்களுக்கு இந்த நிறுவனத்தின் சேவை, உதவி, ஆலோசனை என்பன மிகவும் இன்றியமையாததாகும்.

எனவே இந்த நிறுவனத்தின் சேவை பன்முகப்படுத்தப்பட்டு, அச்சேவைகள் இம் மாவட்டத்தில் விரிவாக்கம் செய்யப்படவேண்டும் என்பதே தற்பொழுது இம் மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்நிறுவனத்தின் வதிவிட பிரதிநிதி பீற்றர் மேயருக்கான வேண்டுகோள் ஆகும்.

அவர்களும் ஆ. ஐ. நா. ஸ்தாபனமும் இதனை எதிர் காலத்தில் கவனித்து, அவலப்பட்டுள்ள இம் மக்களை முன்னைய வாழ்வு நிலைக்குக் கொண்டு செல்வதற்கு உதவுவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

-மயூரன்

## திருமலை அம்பிகா கொலை:

# பூசகரும் உதவியாளரும் தொடர்ந்து விளக்கமறியலில்

திருகோணமலை, ஜூன் 26

திருக்கோணேஸ்வரம் ஆலய பிரதம குருக்களின் மனைவி அம்பிகா கொலை தொடர்பாக பிரதம குருக்களான விசாகேஸ்வர சர்மாவையும் அவரது உதவியாளர் பாலமுரளி சர்மாவையும் அடுத்த மாதம் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி திருமலை நீதிவான் உத்தரவிட்டார்.

இவ்விருவரும்நேற்றுத் திருமலை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்ய பொலீஸார் அவகாசம் கோரினர். இதனை அடுத்தே இருவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டது. (இ-3-150)

# தமிழ் இளைஞர் 20 பேர் கைது

கொழும்பு, ஜூன் 26

புத்தளம் பகுதியில் நேற்று வீடுவீடாகத் தேடுதல் நடத்திய பொலீஸார் 20 தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர்.

இவர்கள் கல்முனை, ஏறாவூர், கொக்கட்டிச்சோலை ஆகிய இடங்களில் இருந்து அண்மையில் இங்கு வந்து தங்கி இருந்தனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர். (இ-3)

## சாயிசிந்தனை

மனிதனின் மனம் வாழ்க்கையின் உயர்வு தாழ்வுகளில் பந்தப்படாமல் இருக்குமானால்; எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அமைதியான மன நிலையைப் பேணுமானால், தேக சுகத்தை நிச்சயம் உறுதிப்படுத்தலாம்.

மனம் ஆகாயத்தைப் போல இருக்க வேண்டும். ஆகாயத்தினூடாகச் செல்லும் பறவைகள், விமானங்கள், முகில்கள் ஆகாயத்தில் சுவடுகள் ஏற்படுத்துவதில்லை. மனத்திற்குப் போஷாக்குக் குறைவு உடம்பின் போஷாக்குக் குறைவிலும் பார்க்க நோய்களைக் கூட உண்டு பண்ணும். வைத்தியர்கள் விற்றமின் பற்றாக்குறையைப் பற்றிப் பேசுவார்கள். நான் அதைவிற்றமின் G பற்றாக்குறை என்றே சொல்வேன். இறைவனின் மகிமையையும், கருணையையும் சிந்தித்துக் கொண்டு இறை நாமத்தைப் பாராயணம் செய்வதை நான் சிபார்சு செய்கிறேன். அதுதான் விற்றமின் G. அதுதான் மருந்து. வரையறுக்கப்பட்ட வாழ்க்கையும் பழக்க வழக்கங்களும் வைத்தியத்தில் மூன்றல் இரண்டு பகுதி. மருந்து மூன்றில் ஒரு பகுதியே.

ஆதாரம்:
Sathya Sai Speaks — (Vol. V)

# பருவகாலச் சீட்டுக்கள்

ஜூலை மாதத்துக்கான பருவகாலச் சீட்டுக்கள் இன்று முதல் கோண்டாவில் சாலையில் வைத்து விநியோகிக்கப் படும் என்று வடபிராந்திய போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் 5ஆம் திகதி வரை விநியோகிக்கப்படும் பருவகாலச் சீட்டுக்களில் இம்முறை வயதுவந்தோருக்கான பல்கலைக்கழக தொழில் நுட்ப மாணவர்களுக்கான பருவகாலச் சீட்டுக்களும் வழங்கப்படவிருக்கின்றன.

இதுவரை பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமே பருவகாலச்சீட்டுக்கள் வழங்கப்பட்டு வந்தன. (இ 3-15

# போதைப்பொருள் எதிர்ப்புத்தினம்

யாழ்ப்பாணம் ஜூன் 26

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனமும், ஞானப்பிரகாசர் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்புத்தினம் இன்று வியாழன் பிற்பகல் 2 மணிக்கு உடுவில் மல்வம் ஞானப்பிரகாசர் சனசமூக நிலைய முன்றலில் நடைபெறும்.

உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம், போருட் அமைப்பின் சமூக அபிவிருத்தி இணைப்பாளர் வி. என். மூர்த்தி ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றுவர்.

## நாளை

**ஆனி 13**

வெள்ளிக்கிழமை

திதி: ஸப்தமி
முற்பகல் 10.36வரை;
நட்சத்திரம்: பூரட்டாதி
காலை 6.44 வரை.
உத்தரட்டாதி
வைகறை 5.02 வரை.
சுபநேரம்: 5.55- 7.25
ராகுகாலம்: 10 25-11.55
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ராஜீவ் கொலைச் சம்பவம்:

# முக்கிய வீடியோ நாடா கைப்பற்றப்பட்டதாம்

சென்னை, ஜூன் 26

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதை நிரூபிக்கும் வீடியோ 'கசட்டு'கள் விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக இந்திய காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதி இராமநாதபுரம் அருகே நரிப்பாலம் வழியாகச் சென்றுகொண்டிருந்த 4 விடுதலைப் புலிகள் உட்பட ஏழுபேரை பொலீஸார் கைது செய்த போது அவர்களிடமிருந்த வீடியோ, ஓடியோ கசட்டுகள் பல கைப்பற்றப்பட்டதாகவும் -

அந்த ''கஸட்டு''களை புலனாய்வுத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தபோது விடுதலைப் புலிகளின் போராட்டத்தை விவரிக்கும் வீடியோ படத்தில் ராஜீவ் காந்தி மனித வெடிகுண்டு மூலம் கொலை செய்யப்பட்டதும் கொலையை விடுதலைப் புலிகள் திட்டமிட்டு நடத்தியதும் விவரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முக்கியத்துவம் வாய்ந்த இந்த வீடியோ கஸட்டை மத்திய புலனாய்வுத் துறையினரும் 'கியூ' பிரிவு அதிகாரிகளும் பார்வையிட்ட பின்னர் அதைப்பற்றிய அறிக்கையைத் தயாரித்து மேலதிகாரிகளுக்கு அனுப்பி வைத்திருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ - 4)

## அதிரடிப்படைக்கு மேலும் 10 ஆயிரம் பேர்

கொழும்பு, ஜூன் 26

விசேட அதிரடிப்படைக்கு உடனடியாகப் பத்தாயிரம் பேரைத் திரட்டுமாறு விசேட அதிரடிப்படைத் தளபதிக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

அதே சமயம் விசேட அதிரடிப்படைக்கு ஆள்களைத் திரட்டுவதற்கு பெருந் தடையாக இருப்பது அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கல்வித் தகைமை என்றும்—

அதிரடிப்படைக்கு ஆள்களைத் தெரிவு செய்ய வேண்டுமானால் கல்வித் தகைமையைக் குறைக்க வேண்டுமென்றும் —பொலீஸ் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது. (இ-3-150)

## நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்)

சேதம் ஏற்பட்டது.

நேற்று மாலையில் தேசிய பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கைப்படி 4 அதிகாரிகள், 60 படையினர் இறந்திருக்கிறார்கள்;

ஆனால் மற்ற செய்தி வட்டாரங்களின் படி 100 க்கு அதிகமான படையினர் இறந்திருப்பர் என்று கூறப்பட்டது.

பெரியமடுத் தாக்குதல் நேற்று முன்தினம் இரவு 10. 30 க்குத் தொடங்கிக் காலை வரை நடந்துள்ளது.

அதே நேரம் 53 ஆவது படையணி அதாவது நெடுங்கேணியில் இருந்து புளியங்குளம் நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் அணியும் தாக்குதலுக்கு இலக்கானது. 55 ஆவது படையணி மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு உதவிக்கு வராமல் இருக்கவே அது நடந்தது.

முன்னேறிச் செல்வதை நிறுத்தும் நோக்கம் படையினருக்கு தற்போது இல்லை. ஆனால் நேற்று நடந்த சம்பவம் பெரும் பிரச்சினையாக இருக்கக்கூடும்.

64 கிலோ மீற்றர் பாதையைப் பிடிப்பதுதான் இந்த இராணுவ நடவடிக்கையின் நோக்கமாகும்

அதில் 20 கிலோ மீற்றரை 43 நாளில் பிடித்திருக்கிறார்கள். அந்த 43 நாளில் 420க்கு மேல் படையினர் இறந்துள்ளனர். ஆயிரத்துக்கு மேல் படையினர் காயமடைந்துள்ளனர்.

இதற்கு அப்பால் 20 கோடிக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

இதனால் இராணுவத்துக்கு மிகப்பெரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இப்படி இக்பால் அத்தாஸ் மேலும் கூறினார்.

## இளைஞனின் சடலம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

அச்செழுப் பகுதியிலிருந்து இனந்தெரியாத இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மாலை பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

குண்டுவெடிப்பினால் சடலத்தின் பெரும்பாலான உடலுறுப்புக்கள் சிதறிக் காணப்பட்டன.

சடலம் இனம் காணும் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது. (இ-15)

## பெரியமடு...

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற தாண்டிக்குளம், நொச்சிமோட்டைப் பகுதிகள் மீதான தாக்குதல்களை அடுத்து வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் தமது படை நடவடிக்கையை இடைநிறுத்தி வைத்திருந்துவிட்டு கடந்த திங்கட்கிழமையே மீண்டும் நகர்வை ஆரம்பித்திருந்தனர்.

அவர்கள் தமது நகர்வை ஆரம்பித்து ஒரு நாளுக்குப் பின் புலிகளின் எதிர்த்தாக்குதல் இடம்பெற்றுள்ளது;

தாண்டிக்குளத்தில் இருந்து பிரதான பாதை வழியாக நகர்ந்த 55 ஆவது படை அணியே தற்போது இரண்டாவது தடவையாகத் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கிறது.

இயந்திரத் துப்பாக்கிகள், சிறிய ஆயுதங்கள், மோட்டார் குண்டுகள் ஆகியவற்றைப் பயன்படுத்திப் புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும், தமது ஆட்லறி நிலைகளைப் பாதுகாக்கப் படையினர் தீவிரமாகப் போராடி புலிகளின் தாக்குதலை முறியடித்ததாகவும் — பாதுகாப்பு அமைச்சின் தலைமைச் செயலகம் நேற்றுத் தெரிவித்தது.

பெரியமடுவில் இருந்து புறப்பட்டு பனிச்சபுளியங்குளம் வரை முன்னேறிய படையினர், தனியன்குளத்துக்கு முன்னேற முயன்ற சமயமே அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக புலிகளின் வானொலி நேற்று இரவு தெரிவித்தது.

பெரியமடுவில் படையினரின் காவலரண்கள் அழிக்கப்பட்டன என்றும்—

கவசவாகனங்கள், டாங்கிகள் சேதமாக்கப்பட்டன என்றும்—

சில டாங்கிகளையும், விசேட படையினர் பாவிக்கும் மோட்டார் சைக்கிள்களையும் புலிகள் எடுத்துச் சென்றனர் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது. (இ-3-21-164)

# வன்னிபோர்முனைக்கு பொலீஸார் அனுப்பப்பட்டதால் சேவை பாதிப்பு

### மேலும் பலரை சேர்க்க நடவடிக்கை

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்ட பகுதிகளைத் தக்கவைப்பதில் பெரும் எண்ணிக்கையான பொலீஸார் ஈடுபடுத்தப்பட்டதால் ஏனைய பணிகளுக்கு பொலீஸாருக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6 மாத காலத்துக்குள் ஆயிரக்கணக்கான பொலீஸார் வடக்குக்கு அனுப்பப்பட்டுள்ளதால் அவசரமாக பொலீஸ் சேவைக்கு ஆள்களைத் திரட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதே நேரம் — கூடியளவு பொலீஸாரைச் சேவைக்குத் திரட்ட பொலீஸாருக்கான கல்வித்தகைமை குறைக்கப்படவேண்டும்என்றும் கோரப்பட்டுள்ளது.

இராணுவத்தில் ஆள்களை திரட்டுவதற்கு கல்வித்தகைமையைக் குறைத்தது போன்று பொலீஸ் சேவைக்கும் கல்வித்தகைமை குறைக்கப்பட வேண்டும் என்று பொலீஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சாதாரண கல்வி அறிவுடன் ஒருவர் அரசியல்வாதியாக முடியுமானால் ஏன் சாதாரண கல்வி அறிவுடன் பொலீஸ் சேவைக்கு ஆள்களைச் சேர்க்கக் கூடாது என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (இ-3-150)

# ராணுவ உணவு விநியோகத்தில் கிழக்கில் பல லட்சம் ரூபா மோசடி

### விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜூன்26

கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினருக்கான உணவுப் பங்கீட்டில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பல இலட்சம் ரூபா மோசடி குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக சிரேஷ்ட இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் இராணுவப் படைப் பிரிவுகள் பலவற்றில் இந்த மோசடிகள் இடம்பெற்றதாக வெளியான தகவலை அடுத்து இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

குறிப்பிட்ட மோசடிகள் இடம் பெற்றிருப்பதாகக் கூறப்படும் இராணுவப் படைப் பிரிவுகளின் தலைமையகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிதிகள் பலர் இராணுவப் பொலீஸாரால் விசாரிக்கப்பட்டதாக இராணுவ அதிகாரி தெரிவித்தார்,

இராணுவ பிரிகேடியர் ஒருவர் மற்றும் இரு கேணல்கள் அடங்கிய குழு ஒன்று இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. (ஐ)

# தீர்வு யோசனை வருட இறுதிக்குள் நடைமுறைக்கு வர சாத்தியமில்லை

### கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கருத்து

கொழும்பு ஜூன் 26

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் இவ்வருட முடிவுக்குள் நடைமுறைக்கு வரமாட்டா என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளில் முக்கியமான வடக்கு-கிழக்கு இணைப்பு எல்லை மீளமைத்தல். பொலீஸ் அதிகாரங்கள் காணி அதிகாரங்கள் குறித்து இன்னமும் இணக்க நிலை ஏற்படாமையே அதற்கு காரணம் என்றும் அந்த வட்டாரம் மேலும் தெரிவித்தன

அதே நேரம் நேற்று முன்தினம் கூடிய நாடாளுமன்றத் தெரிவுக்குழு அதிகாரப் பரவலாக்கல் குறித்து ஆராய்ந்ததாகவும்-

மீண்டும் இக்குழு கூடுவது திகதி குறிப்பிடாமல் கால வரையறையின்றி ஒத்திப் போடப்பட்டுள்ளதாகவும் —

இனி தேவை ஏற்படும் பட்சத்தில் மட்டுமே குழு கூடும் என்றும் — நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உத்தேச அரசியல் நகல் வரைவு விடயத்தில் இனி ஈடுபடப் போவதாகவும் —

இணக்கம் காணப்பட்ட விடயங்கள் அதில் இடம் பெறும் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்.

நவம்பருக்கு முன் அதிகாரப்பரவலாக்கல் யோசனை நாடாளுமன்றத்துக்கு வரும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார், (இ-3-150)

## நரபலி கொடுத்த பூசாரி தலைமறைவு

புதுடில்லி, ஜூன் 26

பீஹார் மாநிலத்தில் உள்ள பகூட்டா என்ற கிராமத்தில் கோயில் பூசாரி ஒருவரும் அவரது குடும்பத்தினரும் தலைமறைவாகி உள்ளனர்.

அமோக விளைச்சல் தர வேண்டி காளியம்மனுக்கு அவர்கள் நரபலி கொடுத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எட்டு வயதுச் சிறுவன் ஒருவனின் கழுத்தை வெட்டி இரத்தம் எடுத்து தமது கோயில் வயல் நிலங்களில் அவர்கள் தெளித்தனர் என்று கூறப்படுகிறது

தலைமறைவாகியுள்ள பூசாரியையும், அவரது குடும்பத்தினரையும் பொலிஸார் தேடி வருகின்றனர். (இ-3)

பரா அமைப்புடன் தொடர்பு:

# முன்னாள் அமைச்சர்கள் இருவர் கைதாகலாம்!

கொழும்பு, ஜூன் 26

'பரா' அமைப்புக் குறித்து விசாரணை செய்துவரும் விசேட இரகசியப் பொலீஸார் முன்னாள் அமைச்சர்கள் இருவர் உட்பட 5 அரசியல் பிரமுகர்களைக் கைது செய்யக் கூடும் என்று பொலீஸ் வட்டரரங்களை மேற்கோள் காட்டி தனியார் வானொலி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள இந்த அமைப்பின் 4 பேர் அளித்த வாக்கு மூலத்தின் அடிப்படையில் நான்கு உதவிப் பொலீஸ் அதிபர்களையும்; 10 பொலீஸாரையும் கைது செய்யலாம் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவ அதிகாரி ஒருவருக்கும் இந்த அமைப்புடன் தொடர்பு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் தலைவரான சரத் டி சில்வா தலைமறைவாகியுள்ளமை தொடர்பாக தமிழ் அரசியல் பிரமுகர்கள் சிலர் விசாரணைக்கு உட்படுத்தப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# அரசியல்வாதிகள் பலரின் பொலீஸ் பாதுகாப்பு வாபஸ்

### சிலருக்குக் குறைப்பு

மட்டக்களப்பு மாவட்ட ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் செய்யது அலி ராகிர் மௌலானாவுக்கு வழங்கப்பட்டிருந்த பொலீஸ் பாதுகாப்பு பொலீஸ் மா அதிபரின் உத்தரவின் பேரில் 2 ஆகக் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்னர் 10 பொலீஸார் இவருக்கு பாதுகாப்பு வழங்கி வந்தனர்.

அதேசமயம் முஸ்லிம் காங்கிரஸ் ஏறாவூர் புனர்வாழ்வுப் பொறுப்பாளர் சேகு தாவுத் பஸீர், முஸ்லிம் காங்கிரஸ் பிரதேச சபை உறுப்பினர் எம். எஸ். அப்துல் வகுப் ஆகியோருக்கு வழங்கப்பட்ட பொலீஸ் பாதுகாப்பு நேற்று வாபஸ் பெறப்பட்டது.

ஏற்கனவே பொலீஸ் பாதுகாப்பு விலக்கப்பட்டு, மீண்டும் பாதுகாப்பு வழங்கப்படும் என உறுதி தெரிவிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சித் தலைவர்களுக்கான பொலீஸ் பாதுகாப்பு நேற்று வரை வழங்கப்படவில்லை என்றும்-

தமக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்படும் வரை மட்டக்களப்பு மாநகர சபை கடிதங்கள் மற்றும் ஆவணங்களில் கையெழுத்து இடப்போவதில்லை என்றும் — மாநகர மேயர் செழியன் பேரின்பநாயகம் அறிவித்துள்ளார். (இ-3-21)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26-06-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org